www.Padasalai.Net www.CBSEtips.in

HSL

# அரையாண்டு பொதுத்தேர்வு - 2022

## தமிழ்

**12 - ஆம் வகுப்பு**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

காலம் :- 3.00 மணி மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள்** : 1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும். 2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - I

**குறிப்பு : 1. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 2. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளுள் மிகவும் ஏற்புடைய விடையினைக் குறியீட்டுடன் எழுதுக :-** 14 x 1 = 14

1. 'பரிதி' இச்சொல்லின் பொருள்
அ) நிலவு ஆ) சூரியன் இ) விண்மீன் ஈ) வானம்

2. எழுத்து வழக்கு அல்லாத தொடரைத் தேர்க.
அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும் ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது
இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன

3. வெள்ளச்சமவெளிகள் அழியக் காரணம்
அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல் இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடிநீர் உறிஞ்சப்படுதல்

4. நெடுநல்வாடையின் ஆசிரியர்
அ) பிசிராந்தையார் ஆ) நக்கீரர் இ) கபிலர் ஈ) ஔவையார்

5. 'அவா முதல் அறுத்தசிந்தை அனகன்' யார்?
அ) இராமன் ஆ) சுக்ரீவன் இ) சந்திரன் ஈ) இலக்குவன்

6. வையகமும் வானகமும் ஆற்றலரிது - எதற்கு?
அ) செய்யாமல் செய்த உதவி ஆ) பயன் தூக்கார் செய்த உதவி இ) தினைத்துணை நன்றி ஈ) காலத்தினால் செய்த நன்றி

7. 'அடையா' இச்சொல்லின் இலக்கணக் குறிப்பு
அ) பெயரெச்சம் ஆ) பண்புத்தொகை இ) வினையெச்சம் ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

8. இரண்டடி வெண்பா
அ) சிந்தியல் வெண்பா ஆ) பஃறொடை வெண்பா இ) குறள் வெண்பா ஈ) கலிவெண்பா

9. வள்ளலாரது சிந்தனைகளின் ஊற்றுக்களமாக இருந்த இடம்
அ) மருதூர் ஆ) வடலூர் இ) மயிலாப்பூர் ஈ) கந்தகோட்டம்

10. 'படிமம்' என்பதன் பொருள்
அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி

11. குடவோலை முறை தேர்தல் நடைபெற்ற காலம்
அ) சோழர் காலம் ஆ) பாண்டியர் காலம் இ) சேரர்காலம் ஈ) பல்லவர் காலம்

12. 'ஆதன்' என்ற சொல் குறிக்கும் தமிழ்மன்னர்
அ) சோழர் ஆ) பாண்டியர் இ) சேரர் ஈ) பல்லவர்

13. தொன்மம் பற்றிய கூற்றுகளுள் தவறான ஒன்றைத் தேர்க.
அ) உருவாக்கப்பட்டு இறுதி விட்ட வடிவங்கள் ஆ) பழங்கதையைக் கொண்டு கருத்தை விளக்குவது
இ) நம்ப முடியாதது போல் தோன்றும் நிகழ்ச்சிகள் செய்திகள்
ஈ) விளங்காத கருத்துக்களைப் பழமொழியின் மூலம் விளக்குவது

14. 'Debit Card' தமிழாக்கம்
அ) பற்று அட்டை ஆ) கடன் அட்டை இ) வரைவோலை ஈ) திரும்பப்பெறல் படிவம்

### பகுதி - II பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை எழுதுக :-** 3 X 2 = 6

15. நிலையாமை குறித்து சவரி உரைக்கும் கருத்து யாது?
16. 'எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்' - யார்க்கு?
17. யாழின் வகைகள் குறித்து எழுதுக.
18. இறைமகனாரின் இன்னலைக்கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை எழுதுக :-** 2 X 2 = 4

19. பருவத்தே பயிர்செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.
20. புக்கில், தன்மனை - சிறுகுறிப்பு எழுதுக.
21. போக்குவரத்தினைச் சீர்செய்யவும் பாதுகாப்பாகப் பயணிக்கவும் உதவும் வகையில் சாலைகளில் இடம்பெற்றிருக்கும் குறியீடுகள் யாவை?

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை எழுதுக :-** 7 X 2 = 14

22. தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப்பிழைகளை நீக்கி எழுதுக.
அ) முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான். ஆ) பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்.
கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக.
அ) வானம், பற, நிலவு, தொடு ஆ) குழந்தை, நட, தளிர்நடை, விழு



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com CamScanner

24. *தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.*
அ) எங்கள் ஊரில் நூலகக் கட்டிடம் கட்ட அரசு நிதி ஒதுக்கியது.
ஆ) மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன

25. *பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.*
அ) நிலத்தக் கௌறனும்டா அப்பதான் வகுறு நிறையும் ஆ) பிள்ளைக்கு உடம்பு சரியில்லை மூணு நாளா சிரமப்படுது

26. *ஏதேனும் ஒன்றனுக்கு உறுப்பிலக்கணம் எழுதுக.* அ) கண்டான் ஆ) பகைத்த

27. *ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி எழுதுக.* அ) அருங்கானம் ஆ) தலைக்கோல்

28. *கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க.* அ) முன் ஆ) கொண்டு

29. *பொருள் வேறுபாடு அறிந்து தொடரமைக்க.* அ) உழை ஆ) உளை

30. *சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.* அ) பலகை ஆ) தாமரை

பகுதி - III பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை எழுதுக:-** 2 X 4 = 8

31. 'செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்' தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக?
32. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.
33. ' ஈசன்மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின் ' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
34. யானைபுக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே - உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக.

பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை எழுதுக:-** 2 X 4 = 8

35. மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.
36. தாயும் தந்தையும் பணிக்குச்செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்திற்குச் செய்யும் உதவிகள் யாவை?
37. திரைப்படத்தின் காட்சி ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.
38. மயிலைசீனி, வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.

பிரிவு - 3

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக :-** 3 X 4 = 12

39. ஏகதேச உருவக அணி *(அல்லது)* சொற்பொருள் பின்வருநிலை அணியைச் சான்றுடன் விளக்குக.
40. *பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்து எழுதுக:*
தினை விதைத்தவன் தினை அறுப்பான். வினை விதைத்தவன் வினை அறுப்பான். *(அல்லது)*
குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை.
41. *கீழ்க்காணும் பகுதியைப் படித்து அறிவிப்புப் பலகைக்கான செய்தியை உருவாக்குக.*

வேர்களை விழுதுகள் சந்திக்கும் விழா, மே - 5, 2019
திருச்சிராப்பள்ளி

வேலை காரணமாக வெளிநாடுகளில் பிரிந்து வாழும் உறவினர்கள், இருபந்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு சந்திக்கும் நிகழ்வு நடைபெற உள்ளது.

திருச்சி உறையூர் அன்பு நகரில் வசிக்கும் தங்கவேல் - பொன்னம்மாள் இணையரின் மூன்று தலைமுறை வழித்தோன்றல்கள் சந்திக்கும் நிகழ்வு மே - 5 ஆம் தேதி இனிதே நடைபெற உள்ளது. உறவினர் கூட்டத்தில் தங்கவேல் - பொன்னம்மாள் அவர்களின் மகன்கள், மகள்கள், பேரன்கள், பேத்திகள், கொள்ளுப்பேரன்கள், கொள்ளுப்பேத்திகள் சந்தித்துப் பெரியோர்களிடம் வாழ்த்துப் பெறுகிறார்கள். இந்நிகழ்ச்சியைத் தங்கவேல் அவர்களின் கொள்ளுப்பேத்தி செல்வி கண்மணி அவர்கள் ஒருங்கிணைக்கிறார்.

42. *இலக்கியநயம் பாராட்டுக. (மையக்கருத்தை எழுதி, ஏற்புடைய எவையேனும் மூன்று நயங்களை எழுதுக)*

*பூமிச்சருகாம் பாலையை*
*முத்துபூத்த கடல்களாக்குவேன்*
*புயலைக் கூறுபடுத்தியே - கோடிப்*
*புதிய தென்றலாக்குவேன்*
*இரவில் விண்மீன் காசினை - செலுத்தி*
*இரவலரோடு பேசுவேன்!*
*இரவெரிக்கும் பரிதியை - ஏழை*
*விறகெரிக்க வீசுவேன்*
- நா. காமராசன்

43. பாடாண்திணை *(அல்லது)* செவியறிவுறூஉ துறையைச்சான்றுடன் விளக்குக.

பகுதி - IV 6 X 3 = 18

44. செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுரை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக. *(அல்லது)*
எச்.ஏ. கிருட்டிணனார் 'கிறித்தவக் கம்பரே' என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக.
45. குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு? விளக்குக. *(அல்லது)*
நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
46. பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க. *(அல்லது)* கோடைமழை கதை வாயிலாக விளக்கப்படும் மனித நேயப்பண்புகளை விளக்குக.

பகுதி - V 4 + 2 = 6

**அடிபிறழாமல் எழுதுக.**

47. அ) விண்வேறு - எனத்தொடங்கும், 'இதில் வெற்றிபெற' கவிதையை எழுதுக.
ஆ) உடைத்து என முடியும் குறட்பாவை எழுதுக.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com
CamScanner.com